தென்னிலங்கையில் மாறிவரும் மனமாற்றம்

(கொழும்பு) இனப்பிரச்னைக்கு நிரந்தரமானதும் ஆக்கபூர்வமானதுமான தீர்வொன்றை காண வேண்டுமென தென்பகுதியில் சிங்கள மக்களிடையே ஏகோபித்த கருத்து நிலவிவருவதாக

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 10 இதழ்: 257
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27-10-1991

உணவுபொருள்விநியோகம் மேலதிக விபரம்

(யாழ்ப்பாணம்) யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருட்கள் வழங்கல் தொடர்பாக முன்னர் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு மேலாக கீழ்க்காணும் விபரங்களையும் உள்ளடக்குமாறு

[4-ம் பக்கம் பார்க்க]

நெருக்கடி நிலையை சாதகமாக்க வேண்டாம்

(யாழ்ப்பாணம்) தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலையினுல் பொது மக்கள் தமது தேவைக்குரிய பண்டங்களை கொள்வனவு செய்வதற்கு இடையூறு எதுவும் ஏற்படாவண்ணம் யாழ்

[2-ம் பக்கம் பார்க்க]

கொக்கட்டிச்சோலையில் அதிரடி

ஏழு படையினர் உயிரிழப்பு

- ஆயுதங்களும் மீட்பு -

(மட்டுநகர்)

கொக்கட்டிச்சோலைப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் 7 இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். பல படையினர் தப்பியோடிவிட்டனர். நவீன ரக ஆயுதங்கள் பலவும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கொக்கட்டிச் சோலை இராணுவ முகாமில் இருந்து மண்முனை முகாமுக்கு ரோந்து சென்ற 35பேர் அடங்கிய இராணுவ அணியொன்றை விடுதலைப்புலிகள் மண்முனையில் வைத்துத் தாக்கியபோதே ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். ஏனையவர்கள் தப்பியோடிவிட்டனராம்.

மேற்படி தாக்குதலில்

(4-ம் பக்கம் பார்க்க)

ராவய பத்திரிகை ஆசிரியர் இரகசிய பொலிஸ் விசாரணையில்

(கொழும்பு) 'ராவய' சிங்களப் பத்திரிகை ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் இரகசியப் பொலிஸாரின் கடும் விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் பத்திரிகைக் காரியாலயமும் பலத்த சோதனைக்குள்ளாகியுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையில் கையெழுத்திட்ட அரசுதரப்பு உறுப்பினர்களின் பெயர்களை பிரசுரித்ததைதடுத்தே தாம் இவ்வாறு விசாரணைக் குட்படுத்தப்பட்டு

(4ம் பக்கம் பார்க்க)

புலிகளின் தாக்குதல் கிழக்கில் உக்கிரம்

(கொழும்பு) கிழக்கு மாகாணத்தில் புலிகளின் தாக்குதல் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைக் காலங்களில் கிழக்கில் புலிகளின் திடீர் தாக்குதல்களில் பெருமளவு படையினர் கொல்லப்பட்டுள்ளதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

மூன்று தமிழர்கள் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு) கொக்கட்டிச்சோலையில் 3 தமிழ் பொதுமக்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

சர்வகட்சி மாநாட்டின் பூர்வாங்க கூட்டம்

(கொழும்பு) சர்வகட்சி மகாநாட்டின் பூர்வாங்கக் கூட்டமொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசியல் யாப்பிற்கான 17வது திருத்தம், 2வது அங்கத்தவர் சபை அமைத்தல் சம்பந்தமான பிரச்னைக்கு இந்த வருடம் முடிவடைவதற்குமுன் தீர்மானம் மேற்கொள்ளப்படவேண்டுமென முடிவுசெய்யப்பட்டது [இ]

யாழ். நகர் பகுதியில் பெண் காவலர்கள்

[யாழ்ப்பாணம்] யாழ் நகரிலுள்ள முக்கிய இடங்களில் தமிழீழ காவல் துறைக்கென பயிற்சிபெறப்பட்ட பெண் படையினர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணப் பகுதியின் முக்கிய இடங்களில் நின்று தமது பணியினை நேற்று மேற்கொண்டதனை காணக் கூடியதாக இருந்தது.

இவர்கள் வாகனங்களையும், சைக்கிளில் வரும் பொதிகளையும் சோதனை நடாத்துவார்கள். [152-56-59]

வவுனியாவில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு) வவுனியா மாவட்டத்தில் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு இன்று காலையுடன் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலிலுள்ளது. (சி)

கொழும்பில்தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் முனையலாம்

(கொழும்பு) தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும்கொழும்பில்தாக்குதல் நடத்த முனையலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க்' மாநாட்டையொட்டி கொழும்பு மாவட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயக் கூட்டப்பட்ட கூட்டத்தில் உரை

(4ம் பக்கம் பார்க்க)

வடக்கில் மட்டும் 6,386 பேர் பலி

(கொழும்பு) இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக வடபகுதியில் மட்டும் 6,386 பேர் இறந்துள்ளதாகவும். தென் பகுதியில் 5,495 பேர் இறந்துள்ளதாகவும் அண்மையில் அரசு வெளியிட்ட புள்ளி விபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்

[4ம் பக்கம் பார்க்க]

தலைமை பதவியிலிருந்து சிறிமா விலகுகிறார்

[கொழும்பு] ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் தலை

(4ம் பக்கம் பார்க்க)

6 மீனவர்கள் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்) பாஷையூர் மீனவர்கள் ஆறு பேர் மண்டைதீவு, கல்முனை பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரிடம் நேற்று சிக்கிகொண்டனர்.

மண்டைதீவு கடல் பிராந்தியத்தில் நேற்று காலை 6 மணிக்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த சில்வஸ்ரர் (வயது 35). சுந்தர் (வயது 20) ஆகிய இருவரையும் இராணுவத்தினர் கரைக்கு வரும்படி துப்பாக்கிகளால் சுட்டு அழைத்தபோது மேற்படி இருவரும் பீதியால் மண்டை

(4ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

A/L இரசாயனம்

A/L 93 இரசாயனம் ஆரம்பம் 28 திங்கள் 4 p m திங்கள், புதன் 4 p.m. ஆசிரியர் சத்திஸ் 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். சி-5533

சனி மாற்றம்

வாக்கியப் பஞ்சாங்கப்படி 28-10-91 சனிமாற்றம் (தனுசுவிலிருந்து மகரராசிக்கு மீண்டும் வக்கிரச்சனி மாற்றம்) விலை 7/- எங்கும் விற்பனையாகின்றது. சோபிதா புத்தகசாலை யாழ்ப்பாணம். (எழுதியவர் - சுதர்ஸன்) (சி-5518)

வாழ்த்து மடல்கள்

வந்துவிட்டன! வாழ்த்து மடல்கள்!! தித்திக்கும் தீபாவளி வாழ்த்து மடல்களை எத்திக்கும் வாங்கி அனுப்பிட இன்றே விஜயம் செய்யுங்கள்: சோபிதா, 363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 5453)

"தமிழீழ மாவீரர் நாள் வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும்"

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தின நிகழ்ச்சிகளில் எமது மக்கள் பெருமளவில் அணிதிரண்டு உணர்வு பூர்வமாக பங்களிப்பதன் மூலம் எங்கள் மாவீரர்களின் உணர்வுகள் தியாகம், லட்சியம் மக்களால் போற்றப்படும்.

மாவீரர்நாள் (91) குழுசார்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழ தேசத்தின் மலர்ச்சிக்காக இரத்தம் சிந்தி தங்களையே இந்த மண்ணுக்காக ஈகம் செய்த மாவீரர்களை நினைவு கொள்வதற்காகவும் அந்த மாவீரர்களை கௌரவிக்கும் முகமாகவும் எமது இயக்கம் நவம்பர் 27ம் திகதியை மாவீரர் நாளாக பிரகடனப்படுத்தி உள்ளது.

எமது தேச விடுதலை இயக்கத்தின் முதற்களப்பலியான சத்தியநாதன் (லெப். சங்கர்) என்னும்மாவீரன் வீரச்சாவை சந்தித்த அந்த நாளையே நாம் மாவீரர் நாளாக குறிப்பிட்டுள்ளோம். இந்த நாள் எமது வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும். இந்த நாளையே எங்கள் தமிழீழ தேசத்தின் தேசிய நாளாகவும் நாம் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

இந்த வருடமும், தமிழீழ மாவீரர் நிகழ்வுகள் நவம்பர் மாதம் 21ம் திகதி ஆரம்பித்து 27ம் திகதி நிறைவாகும். இந்த ஒரு வாரமும் மாவீரர்களை நினைவுகொள்ளக்கூடிய, இந்தத் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை வெற்றி கொள்வதற்காக மக்களை இணைத்துச் செல்லக்கூடிய கருத்துச் செறிவுள்ள நிகழ்ச்சிகள் நடாத்தப்படவேண்டும். தமிழீழம் எழுச்சிக் கோலம் பூண்டு நிற்கவேண்டும்.

இத்தினங்கள் ஏழும் களியாட்டத்திற்கு உரியன அல்ல. அதே நேரத்தில் சோகம் ததும்பும் நாட்களுமல்ல. இவை எங்கள் மண்ணில், எங்கள் வயல்வெளிகளில் எங்கள் கடற்பரப்புகளில் உலவித்திரிந்த - இந்த மண்ணின் வாழ்வுக்காக, எங்கள் தாயக விடிவிற்காகப் போராடிய ஒவ்வொரு போராளிகளினதும் வீரமும், உறுதியும், ஈகையும் தான், இந்தத் தேச விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் காரணங்களாகும். தமது நலனையோ, தங்களது குடும்பத்தின் நலன்களையோ கருதாது, இந்தத் தேசத்தின் நலனை நெஞ்சில் நிறுத்திப் போராடி மரணித்த அந்த மாவீரர்களைக் கௌரவிக்கவேண்டிய கடப்பாடு இந்த மண்ணில் வாழும் மக்களுக்கு உள்ளது.

இந்த வருடத்து மாவீரர் நாள் நிகழ்வுகளுக்காகத் தயாராகுமாறு தமிழீழ மக்களை நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

தரமுயர்த்தப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வைத்தியசாலை விரைவில் போதனா வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட உள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடம் இவ்வைத்தியசாலையில் இயங்கும் எனவும் தெரியவருகிறது.

விசேட வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வேலணைத் கோட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்களின் க. பொ. த. சாதாரண 1990—1901ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்களுக்கும், க. பொ. த. உயர்தர 1991 பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்களுக்குமான துரித விசேட வகுப்புகள் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இயங்கும் வேலணைக் கோட்டப் பணிமனையில் தொடர்பு கொண்டு தம்மைப் பதிவு செய்யுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. புவனேந்திரன் கேட்டுள்ளார்

சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 9-ம் இலக்க கிளையில் பொருட்கள் வாங்கவந்தயுவதிஒருவர்தனது ரூபா5 000பெறுமதியானசைக்கிளை கிளைக்கு முன்பாகநிறுத்திவிட்டு பொருள்களை வாங்கிக்கொண்டு வந்துபார்த்தபோது சைக்கிள் காணாமல் போய்விட்டதாக விடுதலைப்புலிகள் பிரதேச அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (72)

★

(யாழ்ப்பாணம்)

சைக்கிள் களவில் ஈடுபட்டு வந்த யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த பா. செல்வராசா புலிகளால் பிடிக்கப்பட்டார்.

இவரிடமிருந்து இரு சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட சைக்கிள்களை உரியவர்கள் தகுந்த ஆதாரம்காட்டி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்டச் செயலகத்தில் இன்று 27ம் திகதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகாமைத்துவ பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

பாட இணைப்பாளர்களுக்கான முகாமைத்துவ பயிற்சிநெறி 1ஏபி 1சி மகாவித்தியாலய பாடசாலைகளை சேர்ந்த பாட இணைப்பாளர்களுக்கு நடாத்தப்படும். காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரை நடைபெறும்.

27-10-91—29-10-91 வரை ஆங்கிலப் பாட இணைப்பாளருக்கு, 30-10-91—31-10-91 வரை வர்த்தகம், விவசாயம் பாட இணைப்பாளருக்கு 01-11-91 — 03-11-91 வரை கணிதம், விஞ்ஞான பாட இணைப்பாளருக்கு, 05-11-91—06-11-91 வரை கணித விஞ்ஞான பாட இணைப்பாளருக்கு 08-11-91 — 10-11,01 வரை கணிதம், விஞ்ஞான பாட இணைப்பாளருக்கு, 11-11-91—13-11-91 வரை சமூகக் கல்வி பாட இணைப்பாளருக்கு 14-11-91—16-11-91 வரை சமூகக் கல்வி பாட இணைப்பாளருக்கு, 17-11-91—19-11-91வரை சமூகக் கல்வி பாட இணைப்பாளருக்கு, 20-11-1991—இசைப் பாட இணைப்பாளருக்கு— [152]

இடம்பெயர்ந்தவர்களுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து உதவவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்து வந்திருக்கும் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து அவர்களின் துயரங்களில் பங்கு கொள்கிறோம்.

தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ஸ்ரீலங்கா அரசு, தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் செய்யும் பிரசாரங்கள் குறித்து எவ்வகையிலும் மாற்றம் அடைவதில் அர்த்தமில்லை. இது ஒரு தற்காலிகமான துயரம் என்பதை மனதில் நிறுத்தி அனைத்து மக்களும் மனஉறுதி குன்றாதிருங்கள்.

தமது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்ற வசதிகளைச் செய்துகொடுப்பதிலும், எமது மக்களின் உடல், உள, வலு குன்றாது பார்த்துக் கொள்வதிலும் அவ்வப்பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் அதிபர்களும் ஒன்றிணைந்து செயலாற்றுவது அவர்களின் தலையாய கடனாகும்.

நியமனம்

(பண்டத்தரிப்பு)

இம்மாதம் தொடக்கம் மாதகல், இளவாலை, பெரிய ஆகிய பகுதிகளுக்கான சுகாதார தரிசிப்பாளராக திரு. வி. செங்காதரன் யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார். (72)

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் 'அ' 'உ' அட்டை உலர் உணவு விநியோகம் கடந்த 25ம் திகதி தொடக்கம் பண்ணை வீதியில் உள்ள சி. எஸ். கே. கட்டிடத்தில் நடைபெறுகின்றது. இம்மாதம் 31ம் திகதிக்கு முன் பயனாளர்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ளத் தவறின் பொருட்கள் மீண்டும் வழங்கப்படமாட்டாது என்று பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த உதைபந்தாட்டப் போட்டிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளினால் கடந்த இருவருடங்களாக கல்லூரிகளுக்கிடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறாமல்போய்விட்டன. ஆனால், இவ்வருடம் சில கல்லூரிகளுக்கிடையில் மேற்படி போட்டிகள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, இளவாலை சென், ஹென்றியரசர் கல்லூரி உட்பட பல கல்லூரிகள் இம்முறை விளையாட இருக்கின்றன, (வி)

★ தட்டுப்பாடின்றி

சகல உணவு பொருள்களும் மக்களுக்கு கிடைக்கவேண்டும்

(சித்தன்கேணி)

நெருக்கடிமுறியடித்து மக்களுக்கு சகலஉணவுப்பொருள்களும் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்கும் ஆவனசெய்யவேண்டும்.

இவ்வாறு நிழல் செயலக பிரமுகர் திரு. எஸ். பாலச்சந்திரன் வட்டு இந்துக்கல்லூரியில் வியாபாரிகள் கிராமசேவை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட கலந்துரையாடலில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு சிவா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் திரு எஸ். பாலச்சந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: தனியார் கடைகளில் அரிசி, மா, சீனி, பருப்பு வகைகள், தேங்காயெண்ணெய் உப்பு, மண்ணெண்ணெய் ஆகியன விற்க முடியாது தங்களிடம் இருக்கும் இந்தப் பொருள்களின் இருப்பு விபரங்களை உதவி அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்த வேண்டும். பாவனையாளர் பாதுகாப்பு குழுக்கள் ஒழுங்கான முறையில் உணவு விநியோகம் நடைபெறுகின்றதா என்பன கண்காணிக்கவேண்டும். பட்டினியால் வாடும் குடும்பங்களின் விபரங்களை உடனே எமது கவனத்துக்கு கொண்டு வரவேண்டும். பட்டினியால் யாரும் இறக்கும் நிலை ஏற்படாதவாறு கவனிக்க வேண்டும் என்றார்.

தேநீர்க்கடைகளுக்கு அரிசி, மா, சீனி போன்ற பொருள்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கமும் கலந்து கொண்டு உணவு விநியோகம் தொடர்பாக விளக்கம் அளித்தார். [137]

அபின் கடத்தியவர் கைது

(வவுனியா)

ஒரு கிலோ அபினை கடத்த முயன்ற பெண்மணி ஒருவர் தாண்டிக்குளம் தடைமுகாமில் இராணுவத்தினரின் சோதனையின் போது சிக்கிக் கொண்டார்.

வடபகுதியைச்சேர்ந்த மேற்படி பெண் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (வி)

காயமடைந்தோருக்கு ரயில் திணைக்களம் நட்டஈடு

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற 'யாழ் தேவி' ரயில் விபத்தில் காயமடைந்தோர் தமக்குரிய நஷ்ட ஈட்டை பெறுவதற்கு உடன் விண்ணப்பிக்குமாறு, ரயில்வே திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காயமடைந்தோர் தமது விண்ணப்பங்களை, சுப்பிரின்டென்டன், ரயில்வே தலைமையகம், கொழும்பு என்ற முகவரிக்கு உடன் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நெருக்கடி நிலையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்திலுள்ள எல்லா விற்பனை நிலையங்களும் வழமைபோல் திறந்து செயற்படவேண்டும் என்பதோடு தற்காலிகமாக எழுந்துள்ள இச்சூழ்நிலையை பயன்படுத்தி வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் பணியாளர் எவரையும் ஆட்குறைப்பிற்கோ, வேதனக் குறைப்பிற்கோ உட்படுத்தாது இந்நெருக்கடியை வென்றெடுப்பதற்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கையில்: பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இனிவரும் மக்கள் தேவையினைச் சீர்வரப் புரிந்துகொண்டு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை நுகர்வோருக்கு அத்தியாவசியப் பண்ட விநியோகத்தை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்களுக்குச் சிரமமில்லாத நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசியப்பண்டங்களை எடுத்துச்செல்கையில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட படிவம் 14 இ படிவம் 25 ஆகியவற்றைத் தம்முடன் எடுத்துச் செல்லப்படுவதுடன் காவல்துறையினரின் பரிசீலனைக்கு இவை காண்பிக்கப்படவேண்டும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

உணவுப் பொருள்களைப் பெற பங்கீட்டுமுறை அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

"பொருளாதாரத் தடை உள்ள இக்காலத்தில் மக்கள் இலகுவாக பொருட்களை பெறுவதற்கு பொருள் பங்கீடு செய்யும் முறை ஒன்றை அறிமுகஞ் செய்துள்ளோம்"

இவ்வாறு விடுதலைப் புலிகளின் நிழல் நிர்வாக கூட்டுறவு அதிகாரி மயூரன் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற வர்த்தகர்களின் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: "தனிப்பட்ட வியாபாரிகள், அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், பால்மா வகைகள், பருப்பு, தேயிலை போன்ற பொருட்களை தங்கள் கடைகளில் விற்கக்கூடாது. இதனை இப்பொருட்களை நாங்கள் எடுக்கப் போகிறோம் என்று மக்கள் கருதக் கூடாது.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பொருட்கள் விற்றபின்பு வர்த்தகர்களிடம் உள்ள இந்தப் பொருட்களை பங்கீட்டு முறையில் விநியோகிக்க ஏற்பாடு செய்வோம். கொழும்பில் இருந்து கூடிய பொருட்கள் யாழ். மாவட்டத்துக்கு வந்தால், சில நேரங்களில் இந்தமுறை நீக்கப்படலாம்.

இதனால் எந்தவிதத்திலும் வர்த்தகர்களுக்கு நட்டம் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுத்துள்ளோம். வர்த்தகர்கள் தங்களிடம் உள்ள பொருட்களை உதவி அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு வருமாறு வேண்டுகின்றோம்" என்றார்.

(152)

சித்தமருத்துவசத்திரசிகிச்சை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவச் சத்திர சிகிச்சைப் பரீட்சை முடிவுகள், அண்மையில் வெளியாகியுள்ளது.

சித்த மருத்துவச் சிகிச்சை முதலாவது வருடப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்தோர் வருமாறு;

இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்; செல்வி ஆர். சுமங்களாதேவி.

இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவில் சித்தியடைந்தவர்: செல்வி என். சந்திரா.

சாதாரண சித்தியடைந்தோர்; செல்வி வி. அமராவதி, வி. சக்திவேல், கே. நடேசராசன், செல்வி எஸ். சசிகலா, செல்வி ஏ. அன்புச்செல்வி, பி. சரவணநாதன், பி. திலீபன்.

சித்த மருத்துவச் சத்திர சிகிச்சை இரண்டாம் வருடப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்தோர் வருமாறு:

இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவில் சித்தியடைந்தவர்; வி. எஸ் சிவசுப்பிரமணியம்.

சாதாரண சித்தியடைந்தோர்: செல்வி ஏ. எஸ். டி. அனிடா, செல்வி ஆர். ராஜீவ் செல்வி, எஸ் மோகமதி, செல்வி ஆர். மதிவதனா, ஜி. சிறிதரன், எஸ். யோகநாதன், செல்வி கே. கிருஷ்ணவேணி, செல்வி கே. வானதி, செல்வி சி. சுமதி.

சித்த மருத்துவச் சத்திர சிகிச்சை மூன்றாவது வருடப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்தோர் வருமாறு:

இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்; செல்வி எஸ். சியாமளா.

சாதாரண சித்தியடைந்தோர்: செல்வி எஸ். கலைமகள், செல்வி எஸ். மனோரஞ்சிதமலர், செல்வி என். ரேணுகா, செல்வி பி. சாந்தினி, செல்வி ஆர். சாந்தி, செல்வி சி. சுகந்தினி, என். வர்ணகுலேந்திரன்.

(153)

50 குடும்பங்களுக்கு

ஒரு வாரம் இலவச உணவுபொருள் விநியோகம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்த சுமார் 50 தீவக குடும்பங்களுக்கு ஒரு வாரத்துக்கான இலவச உணவுபொருள் விநியோக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் வேலணை, புங்குடுதீவு ஆகிய தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் தஞ்சமடைந்த சுமார் 50 குடும்பங்களுக்கு ஒரு வார காலத்துக்கு இலவசமாக உணவுப் பொருள்களையும் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(137)

2 ஆயிரம் குடும்பங்களுக்கு பாய்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் யாழ். செஞ்சிலுவை சங்கம் மூலம் இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் தங்கியிருக்கும் 2000 குடும்பங்களுக்கு பாய்கள் வழங்க உள்ளது.

இதேவேளை றெட்பானா, சிறுவர் பாதுகாப்பு நிதியம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்கள் இணையத்தின் மூலம் முகாம்களுக்கு சமையல் பாத்திரங்கள் வழங்கி வருகின்றன.

(152)

வேலணை, புங்குடுதீவு

அகதிகளின் நிவாரணத்தை நிறுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணை புங்குடுதீவில் இருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகளுக்கு இலவச உலர்உணவு தொடர்ந்து வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு புனர்வாழ்வு யாழ். அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

தற்போது இடம் பெயர்ந்த நாளில் இருந்து கொடுக்கும் இரு வாரகால உலர் உணவு மாத்திரமே வேலணை உதவி அரசாங்க அதிபரின் கீழுள்ள மக்களுக்கு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

[152]

இலங்கைமுழுவதும் 6,73,000 அகதிகள்

(கொழும்பு)

"இலங்கை முழுவதும் தற்போது 1 லட்சத்து 52 ஆயிரத்து 355 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 73 ஆயிரத்து 685 பேர் அகதிகள் முகாம்களில் இருக்கின்றார்கள்"

இவ்வாறு, அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி குடும்பம் ஒவ்வொன்றுக்கும், மாதாந்தம் 315 ரூபா பெறுமதியான உலர் உணவு வழங்கப்படுகின்றது. இதேவேளை, அண்மைக்கால பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டோருக்கு, 15 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபா வரை நட்டஈடாக, புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலன் அமைச்சு தற்போது வழங்கி வருகின்றது என்று ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

(வி)

இராசி பலன்

27-10-1991
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 10)

சதுர்த்தி மு. ப. 11-18 வரை; மிருகசீரிடம் பி. இ. 307 வரை மரணயோகம் இராகுகாலம் மாலை 4-33 முதல் 6-03 வரை; சுபநேரம் காலை 9-03 முதல் 10-38 வரை

மேடம்: நல்லோர் இணக்கம் வாக்கு வசீகரம், தொழில் சிறப்பு.

இடபம்: மனமாற்றம், தொழில் இடைஞ்சல், ஞாபக மறதி.

மிதுனம்; குடும்பசுகம், புதிய நிலை, தொழில் லாபம்.

கடகம்: அதிக யோசனை, தொழில் முடக்கம், நட்டம்.

சிங்கம்: பதவிப்பெருமை, பயணம், வெற்றிவாய்ப்பு.

கன்னி; அதிகார போட்டி, அலைச்சல், குடும்பநன்மை.

துலாம்: துயரமான செய்தி, மனமுடை, காரியதாமதம்.

விருச்சிகம்: தடுமாற்றம், பகைத்துக் கொள்ளல், காரிய பீதி.

தனுசு: தொழில் சிறப்பு, வெளியேற்றம், புதியசிந்தனை.

மகரம்: இல்லச்சிறப்பு, இனிய வார்த்தை, இனசன வரவு.

கும்பம்: ஏமாற்றம், போட்டி நிலை, தயக்கம்.

மீனம்: வீண்பகை, தயக்கம், உடல் உபாதை.

ஜோஸ்யர்

அதிக பயன் தரும் சோயா அவரை

கமக்காரருக்கும், கைத்தொழிலாளருக்கும் கால்நடை வளர்ப்போருக்கும் மனித உணவிற்குப் பயன்படும் சோயாப் பருப்பில் 14.22 வீதக் கொழுப்புச் சத்தும், 30 48 வீதப் புரதச் சத்தும் உண்டு. இச்செடி, காற்றில் உள்ள நைதரசனை உட்கொண்டு அதனது வேரில் தோன்றும் மணிகளுள் அதனைச் சேர்த்து நிலத்திற்கும் போஷாக்கு ஊட்டிப் புத்துயிர் அளிக்கிறது.

ஆசியாக் கண்டத்தில் முதன் முதலாகச் சோயா அவரை உதித்தது. ஆனால் எமது பகுதியில் 75ம் ஆண்டே அறிமுகமானது. 75ம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 72 ஏக்கரில் செய்யப்பட்டது.

எமது பிரதேசத்தில் நீர்ப்பாசனத்தின் கீழ் இருபாட்டி மண்ணுள்ள இடமெல்லாம் இப்பயிர் நல்ல வருவாய் தரும். களித் தன்மைத் தரையிலும், மணல் தரைகளிலும் விளைவு குறைவாயிருக்கும். கானலைத் தாங்கும் தன்மையுள்ள பயிரானபோதிலும் நிலத்தில் நீர்ப்பற்று அற்றுப்போகும் போது விளைவு பாதிக்கப்படும்.

முக்கியமாகப் பூ அரும்பும் நாள் தொடங்கி, காய் முற்றும் காலம் வரை நிலத்தில் ஈரலிப்பு இருக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சி நீர்ப்பாசனம் செய்தால் பயிர் பாழடையும்.

இப்பயிர் யாழ். குடாநாட்டில் கிணறுகள் உள்ள வயல் நிலங்களில் வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் பயிரிடலாம். வட-கிழக்குப் பருவ மழை காலத்தில் வரன்பார்த்த பயிராக நட விரும்பினால் கார்த்திகை நடுக்கூற்றில் நடுவது நலம்.

1½-3 அடி உயரமுள்ள இப்பயிரின் மூலவேர் 4-5 அங்குல நீளமுள்ளது கிளை வேர்கள் நிலமட்டத்தில் இருந்து 2-4 அங்குல ஆழத்திற்கு அடர்த்தியாய் வளர்வன. களை கட்டும்போதும், நிலம் தூர்வை செய்யும்போது 1½ அங்குலத்திற்கு மேல் செல்லல் ஆகாது. காய்கள் முற்றும் முன்னதாகவே இலைகள் முதிர்ந்து, பழுப்படைந்து சொரிந்து விடும். இதனைக் காரணமாகக் கொண்டு சோயா அவரையை ஒரே முறையில் அறுவடை செய்யலாம்.

சோயா அவரைப் பயிர் உரோமங்கட்டுள்ளதால் பூச்சி புழுத் தாக்கம் மிகவும் குறைவு. அதிகம் சேதம் விளைவிப்பது இல்லை. சோயா அவரையில் பி.கே.5 தாய்லன் ஆகிய இனம் எமது பிரதேசத்திற்கு உகந்தது. வெண்ணிற மணியுள்ள வர்க்கமே எண்ணெய் பிழிவதற்கு உகந்தது.

ஒரு போகத்திற்கு 1,500 கிலோ கிராம் விளைவு தரக்கூடியது இவ்வர்க்கங்களே வரிசையில் 3 அங்குல இடைதூரத்திற்கு ஒன்று, இரண்டு விதை வீதம் அரை அங்குல ஆழத்தில் ஏக்கருக்கு 30கிலோ விதை நடவேண்டும். அடிக்கட்டுப் பசளையாக உக்கிய மாட்டெரு இடலாம். சோயா அவரைச் செடி ஒன்று 100 நெற்றுத் தருவதால் ஏக்கர் ஒன்றுக்கு 1,500 கிலோ கிராம் தொடக்கம் 2,400 கிலோ கிராம் வரை விளைவைப் பெறலாம் என எதிர்பார்க்கலாம்.

அறுவடைசெய்து பாதுகாத்தப்பட்ட சோயா அவரை முத்துக்களை பல நாட்களுக்கு 2-3மணித்தியாலயம் நிழலில் காய வைத்தல் வேண்டும், முத்தின் ஈரப்பசுமை பத்துசதவீதத்திற்கு மேற்பட்டால் இவை களஞ்சியத்தில் பழுதடைந்து துர்நாற்றம்தரும். நன்கு காய்ந்த முத்துக்களை பொலித்தீன் பொதி, தகரம் போன்றவற்றில் அடைப்பதனாலும் பாண்டல் மணம் உண்டாகும் ஆகையால் சோயா முத்துக்களைசல்லடை போட்ட சாக்குகளில் இட்டு குளிர்மையான சூழலில் வைக்க வேண்டும்.

சோயா அவரையை அறுவடை செய்து மூன்று மாதங்களின் பின் விதையின் முளைத்திறன் வெகுவிரைவாக குன்றிவிடும்.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்

1990—91 கல்வியாண்டு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக 1990—91ம் கல்வியாண்டு நவம்பர் மாதம் 4ம் திகதி ஆரம்பமாக உள்ளதாக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சங்கானையில்

பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்க ஏற்பாடு

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இருபத்தைந்து கிராம சேவை அலுவலர் பிரிவிலும் பாவனையாளர் பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இந்தக் குழுவில் கிராம முன்னேற்றச்சங்கங்களின் பிரதிநிதிகள் ப.நோ.கூ.சங்கக்குழுக்களின் உறுப்பினர்கள் சனசமூக நிலையங்களின் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிக்கவுள்ளனர்.

(137)

தென்மராட்சி

இளைப்பாற்று வேதனம் பெறுவோர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன் புரிச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் திரு. பூ. வெற்றிவேலு தலைமையில் நடைபெற்றது. பல்வேறு திணைக்களங்களிலுமிருந்து ஓய்வுபெற்ற சுமார் 100 பேர்வரை கலந்து கொண்டனர்.

முதற்கட்டமாக வாழ்க்கைச் செலவுப்படி 260- ரூபா பெற உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

திரு. பூ. வெற்றிவேலுவை தலைவராகவும் திரு. எஸ். இரத்தினராசாவை செயலாளராகவும் கொண்ட 21 பேர் அடங்கிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

அடுத்த விசேட பொதுக் கூட்டத்தை நவம்பர் 23ல் நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

"தமிழ் அகதிகளை ஆதரித்துப் பேச தமிழகத்தில் உரிமை இல்லை"

(சென்னை)

"தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக பேச, தமிழ்நாட்டில் உரிமையில்லை. அவர்களுக்கு ஆதரவாகப் பொதுக்கூட்டங்களை நடாத்துவதற்கும் தமிழக அரசு தடைவிதித்துள்ளது. இது கண்டனத்துக்குரிய செயலாகும்.''

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் டாக்டர் சர்வபள்ளிகோபால் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான தமது கருத்தை பத்திரிகையாளர் மத்தியில் தெரிவிக்கமுயன்ற திரு. பக்தவத்சலம் கைதுசெய்யப்பட்டார்.

ஆனல் இலங்கையில் போராட்டம் நடாத்தும் விடுதலைப்புலிகளுக்கு தமது அமைதியான ஆதரவை தமிழக மக்கள் தெரிவிப்பதை தமிழக அரசினால் தடுத்துவிட முடியாது என்று டாக்டர் கோபால் மேலும் கூறினார். (வி)

இலங்கையர்களே கொல்லப்பட்டார்கள்

(கொழும்பு)

திருகோணமலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகனத் தாக்குதலொன்றில் 5 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஐவரும் இலங்கையர்கள் என்றும் இதில் இருவர் முஸ்லீம்கள் என்றும், மற்றும் மூவரும் எவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படவில்லை.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர் ஏற்கனவே ஹோட்டலில் இறங்கியமையினால் தாக்குதலுக்குள்ளான இந்த வாகனத்தில் பயணம் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (153)

குமண வருகிறது

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட குமண கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தினை வந்தடையவுள்ளது.

இக்கப்பலில் கொழும்பு வைத்தியசாலைக்கென சிகிச்சைக்குச்சென்று சுகமடைந்த நோயாளர்களும் திரும்புவர். மேலும் தபாற்பொதிகள், உணவுப்பொருட்கள், மருந்து வகைகளும் எடுத்துவரப்படுகின்றன. [56]

மூன்று

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுமுன்தினம் கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற மோதலின் பின் இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

மேலும் தமிழ் பொதுமக்கள் சிலர் படையினரின் கடும்தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். [153]

மரண அறிவித்தல்

கந்தையா தம்பையா

[இளைப்பாறிய அதிபர்]

கந்தையா தம்பையா காலமானார். இவர் வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற தங்கரெத்தினத்தின் அன்புக் கணவரும், நவீனதயாளன் [பொறியியலாளர் U. K.], ராஜினி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெகதீசன் [கா. சீ. க. மின்னியல்பகுதி], பிரேமாவதி (U. K.), ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வி N. சுப்பிரமணியம் அவர்களின் மைத்துனரும், யூலி, தருசினி, ஏஞ்சல், கயல்விழி, பேரய் தாயலினி, இமேசன், தர்மினி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [26-10-91] மாலை 5 மணிக்கு பிப்பிலி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி R. ஜெகதீசன்

40, தபாற்கந்தோர் வீதி,
மானிப்பாய்.

[சி 5535]

கதிரவேலு சுப்பையா

(ஓய்வுபெற்ற அதிபர்)

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகக் கொண்டவரும், சிவன்கோவில் வடக்கு வீதியில் வசித்தவருமான கதிரவேலு சுப்பையா 26-10-91 ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், யோகேஸ்வரன் [ஆசிரியர்], நகுலேஸ்வரன் [கணக்காளர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - காரைநகர்] நிமலேஸ்வரன் [வர்த்தகர்], லோகேஸ்வரன் (வர்த்தகர்), பரமேஸ்வரன் (தொழிற்பயிற்சி விரிவுரையாளர்) பரமேஸ்வரி, கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி (ஆசிரிய கலாசாலை - பலாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசோதி [கந்தன் களஞ்சியம், கிளிநொச்சி], காலஞ்சென்ற கனகேந்திரம் [ஸ்ரீ முருகன் ஸ்ரோஸ், கொட்டடி], கணபதிப்பிள்ளை [களபூமி அரிசி ஆலை], கமலமணி, நாகேஸ்வரி, லலிதாம்பிகை, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் [27-10-91] இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. யோகேஸ்வரன்

84, சிவன்கோவில் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி 5584)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்ரோபர் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/188886/81

போதைவஸ்து கடத்தல் 35 பேர் சுட்டுக் கொலை

(பீக்கிங்)

சீனாவின் யுனாங் மாநிலத்தில் போதைவஸ்தைக் கடத்திய குற்றத்திற்காக 35 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

40 ஆயிரம் பொதுமக்கள் முன்னிலையில் நேற்று நடைபெற்ற பகிரங்க விசாரணையின் பின் மேற்படி 35 பேரும் குற்றவாளிகளாக காணப்பட்டதும், உடனடியாகவே சீன அதிகாரிகளினால் மக்கள் முன்னிலையில் வைத்துசுட்டுக்கொல்லப்பட்டனர். (வி)

தலைமை

1-ம் பக்கத் தொடர்ச்சி]

மைப் பதவியை திரு. அனுரா பண்டாரநாயக்காவிடம் ஒப்படைத்துவிட்டு இடதுசாரி இயக்கங்களைக் கொண்ட பொது முன்னணிக்குத்தலைமை தாங்க திருமதி ஸ்ரீமாவோ முன்வந்துள்ளார்.

ஆறு மீனவர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீவு கரைக்குச் சென்றுள்ளனராம்.

இதேபோல் கல்முனைப் பகுதிக்கு அப்பால் மீன்பிடிக்கச் சென்ற நேசன் வீரக்கோன் (வயது 40), அ. அன்ரன் (வயது 45), பட்டுக்கிளி (வயது 36), சி. சவரியான் (வயது 65) ஆகிய நால்வரும் படகில் செல்லும்போது கல்முனைப்பகுதி நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் கடலில் இறங்கி மேற்படி படகைக் கரைக்கு வரும்படி சைகை காட்டினர் மீனவர்கள் பயத்தினால் கரைக்குச் சென்றபோது நால்வரையும் இராணுவத்தினர் கூட்டிச்சென்றதாகவும் கூறப்படுகின்றது.

மேற்படி மீனவர்களுக்கு ஏற்பட்ட நிலை பற்றி தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் உறவினர்கள் புகார் செய்துள்ளனர் (வி)

கொழும்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், படையினர் மட்டுமன்றி பொதுமக்களும் பெரும் பங்கை வகிக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

அமைச்சர் ரஞ்சனின் கொலையுடனும், கூட்டுப் படைத் தலைமையக குண்டு வெடிப்புடனும் தொடர்புடைய 'ரவி' என்பவர் வத்தளையில் நடமாடுவதாகவும் ஜெனரல் தெரிவித்தார்.

புலிகளின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

கடந்த ஒரு வாரத்தில் 8 படையினர், 3 ஊர்காவற் படையினர் உட்பட 20 பேர் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனராம். (இ)

ராவய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருவதாகவும் திரு. ஐவன்தெரிவித்துள்ளார்.

இது ஒரு பழிவாங்கல் நடவடிக்கையாக தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார். [153]

தென்னிலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ராவய' பத்திரிகை ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட இனப்பிரச்னை தீர்வைத் தொடர்ந்து மறுத்துவருகிறது. தற்போதைய நிலையில் பழையநிலையோவன்றி சிங்கள மக்களிடையே இனத்துவேச மனப்பான்மை பெருமளவில் மாறிவிட்டது.

எனினும் செய்திப்பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இனத்துவேசத்தை தொடர்ந்தும் வெளியிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (153)

கொக்கட்டிச்சோலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஏ. கே. எல், எம். ஜி-1. றமைகஸின்-5, லீங்குகள்-425, ரீ.56 2 ரகம்-1, ரீ. 56 1 ரகம்-2, ரீ. 56 பட்டு மாடல்-1, ஏ. கே. மகஸின்-19 ஏ. கே. துப்பாக்கி எறிகணை-3, ஐ. எம். ரவைகள்-550, தொலைநோக்கிக் கருவி-1, ஜே ஆர். கைக்குண்டு-1.

இத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இரு வீர வீரவேங்கைகள் வீர மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி-153)

வடக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது

மேற்படி வன்செயல்களினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இதுவரை 53 கோடி ரூபாவை அரசு நஷ்ட ஈடாக வழங்கியுள்ளதாகவும், இதில் 27 கோடியே 29 லட்சம் ரூபாவை வடக்கில் இறந்தவர்களுக்கும் 27 கோடியே 38 லட்சம் ரூபாவைத் தெற்கில் இறந்தவர்களுக்கும், அரசு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது: [வி]

★ ஆனையிறவு

தடை முகாமில் பொலிஸார் சோதனை

[கொழும்பு]

ஆனையிறவு தடைமுகாமில் சோதனை நடவடிக்கையில் பொலிசார் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து ஹெலிகொப்டர் மூலம் ஆனையிறவிற்கு பொலிசார் அனுப்பிவைக்கப் படவுள்ளார்கள்.

இதேவேளை இப்பகுதியால் போக்குவரத்து நடாத்துவது குறித்து விடுதலைப்புலிகளுடன் செஞ்சிலுவைச் சங்கம் பேச்சுக்கள் நடாத்திவருகிறதாம்.

வங்கி ஊழியர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் இலங்கை வங்கி, மக்கள்வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நாஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஊழியர்கள் அனைவரையும் இன்று காலை 10 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வயிற்றோட்டம்: 2000 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷின் வடக்குப் பகுதியில் இதுவரை 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வயிற்றோட்ட நோயால் இறந்துள்ளனர். இன்னும் நூற்றுக்கணக்கானோர் இறக்கும் நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. (வி)

உணவுப்பொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அறிக்கை ஒன்றின்மூலம் கேட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், அத்தியாவசிய பண்ட நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய் அந்நிரலில் இருந்து நீக்கப்பட்டும் விற்பனைக் கட்டுப்பாட்டில் இருந்து விலக்களிக்கப்பட்டும் உள்ளது.

தேநீர்க் கடை, பலகாரம் சுட்டு விற்போர் விசேட வைபவங்களுக்குக் குறித்துரைத்த பண்டங்கள் தேவைப்படுவோர் தத்தம் பகுதியிலுள்ள பிரதேச நுகர்வோர் பாதுகாப்புக் குழுவினரிடம் தமது தேவையினை எண்பித்து சிறப்பு அனுமதியினைப் பெறுவதன் மூலம் தனிநபர் வர்த்தகர்களிடம் பொருட்களைக் கொள்வனவு செய்தல் இயலும்.

வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுவோரது சீனி, தேயிலை, லக்ஸ்பிறே ஆகியவற்றினது தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக வைத்தியசாலை நலன்புரிச் சங்கங்கள், வர்த்தகத் திணைக்களம் மூலம் இப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசியப்பண்ட நிரலில் பால்மா வகை எனக் குறிக்கப்பட்டிருப்பது பின்வருவனவற்றை மட்டுமே உள்ளடக்குகின்றது:

அங்கர், லக்டோஜின், நெஸ்பிறே லக்ஸ்பிறே, எஸ். எம். ஏ. இப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு குழந்தையின் பிறப்பை உறுதிப்படுத்தும் ஏதேனும் சான்று, ஆவணம் ஒன்றை கிராமிய மட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவினரிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்று பால்மா கொள்வனவு செய்தல் இயலுமானது.

பங்கீட்டு அட்டையில் ஐவருக்கு கூடுதலாகவுள்ள குடும்பங்கள் விரும்பின் மேற்பட்ட ஒவ்வொரு உறுப்பினர்களிற்கும் ஒருகிலோ அரிசியையும் 500 கிராம் மாவையும் அறிவித்த பங்கீட்டு அளவாக பெற்றுக்கொள்ளலாம்.

இவ்விபரங்களையிட்டு வேண்டிய நடவடிக்கைகளை வகுத்துக்கொள்வதற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் 28-10-91 பிற்பகல் 3-00 மணிக்கு கூடி ஆராயவிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.